வளன்ஆயம்
நொடிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# ‘சாத்தான்டி அம்மன்’ தல வரலாறும் வழிபாடும்

**மா. யுவஸ்ரீ**
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி (தன்னாட்சி)
திருச்சி –2

**ஆய்வுச் சுருக்கம்:**

சிறுதெய்வ வழக்காறுகள்நாட்டுப்புறத் தெய்வங்கள் , கதைகள் , பழமொழிகள், பாடல்கள், நம்பிக்கைகள் போன்ற வழக்காறுகளைக் கொண்டு விளங்குகின்றன. தெய்வங்கள் மனிதர்களாய்த் தோன்றி வாழ்ந்து மாண்ட கதை , பழிதீர்த்த கதை , தெய்வம் தற்போதைய இருப்பிடத்தில் வந்து அமர்ந்த கதை , அதன் அதீதச் செயல்கள் என்று தெய்வக் கதைகள் நிறைந்திருக்கும். கதைகளில்லாத சிறு தெய்வங்களே இல்லை. இக்கதைகள் அனைத்தும் நம்பிக்கையின் அடிப்படையில் தோற்றம் பெற்று , வழிவழியாக மக்களின் வாய்மொழியாக வழங்கப்பட்டு வருகின்றன. அவ்வகையில் கரூர் மாவட்டம் நங்கவாரத்தில் அமைந்துள்ள சப்த கன்னிகளுள் ஒருவரான பிடாரி என்கின்ற சாத்தாயி என்ற சிறு தெய்வத்தின் தல வரலாற்றினையே இக்கட்டுரையில் கூறப்படவுள்ளது.

**திறவுச்சொற்கள்:**
இயற்கை வழிபாடு, சப்த கன்னியர், சாமுண்டி

**முன்னுரை:**

இயற்கையின் ஆற்றலைக் கண்டு அஞ்சிய மனிதன் அதன் சீற்றத்திற்கு ஆளாகாமல் இருப்பதற்காக இயற்கை வழிபாடுகளும் விழாக்களும் தோன்றின. அதன் பின் இயற்கையை உருவகப்படுத்தி வழிபடத் தொடங்கினான். நாட்டுப்புற

மக்களிடையே இன்றும் இயற்கை வழிபாடு இருப்பதைக் காணலாம். மேலும் பஞ்ச பூதங்களான நீர்,நிலம், காற்று, ஆகாயம் நெருப்பு முதலியவற்றை வழிபடுவதையும் நாம் காண்கிறோம்.

**சிறுதெய்வம் :**

நாட்டுப்புற மக்களால் தொன்று தொட்டு வழிபடப் பட்டு வரும் கிராமத் தெய்வங்களே சிறுதெய்வங்கள் ஆகும். "குருவை மறந்தாலும் குலதெய்வத்தை மறவேன்"[1](சு. சக்திவேல் , நாட்டுப்புற இயல் ஆய்வு ,ப.222,1983 ) என்பது மூத்தோர் வாக்கு. சமூகத்தின் அடித்தள மக்கள் வழிபடும் கடவுளரைச் சிறுதெய்வங்கள் எனவும் மேல்தளத்து மக்கள் வழிபடும் தெய்வங்களை பெருந்தெய்வம் எனவும் குறிப்பிடும் வழக்கம் அக்காலத்திலேயே இருந்துள்ளது. உண்மையில் சிறுதெய்வங்கள் எனப்படுபவையே மிகப்பழைய நம்பிக்கைகளையும், உணர்வுகளையும் பேணி நிற்பவையாகும். இந்தச் சிறுதெய்வ வழிபாட்டில் வீட்டுத்தெய்வ வழிபாடு, குலதெய்வ வழிபாடு, இனத்தெய்வ வழிபாடு, ஊர்த்தெய்வ வழிபாடு மற்றும் வெகுசனத் தெய்வ வழிபாடு, பெண் தெய்வ வழிபாடு,ஆண் தெய்வ வழிபாடு எனப் பல வகைகள் காணப்படுகின்றன. இந்தத் தெய்வ வழிபாட்டு முறையில் பொதுவானஇலக்கணங்களோ, வரைமுறைகளோ வகுக்கப்படவில்லை. அவை காலம் காலமாக முன்னோர்களால் செய்யப்படுகின்ற சடங்குகளை அடிப்படையாக வைத்து பின்பற்றப்படுகின்றன.

இந்தத் தெய்வங்களின் வழிபாடானது நாட்டார் மக்களின் நம்பிக்கை அடிப்படையிலும், அவர்கள் முன்னோர்கள் கற்றுத் தந்த முறைப்படியும் நடக்கிறது.பல்வேறு குலம், இனம், மொழி என்ற பாகுபாடுகள் இருப்பதால் எண்ணில் அடங்காத சடங்குகள் கொண்டதாக 'சிறுதெய்வ வழிபாடு' காணப்படுகிறது. சங்க

கால பழந்தமிழர்களின் வழிபாட்டில் பெருந்தெய்வம் - சிறுதெய்வம் என்ற வேறுபாட்டுணர்வுகள் இல்லை. சமய நோக்கு, சமநோக்கு என்ற கொள்கையுடன் சிவன், திருமால், முருகன், இந்திரன், வருணன் என்ற பெருந்தெய்வங்களும், இயற்கை வழிபாடு, கொற்றவை வழிபாடு, நடுகல் வீரவணக்க வழிபாடு, காவல் தெய்வ வழிபாடு முதலான சிறு தெய்வ வழிபாட்டின் மரபுக் கூறுகளும் பழந்தமிழ் மக்களின் வழிபாட்டுணர்வுகளில் கலந்திருந்தன.தற்காலத்தில் வழிபடுவோரின் பொருளாதார நிலைக்கேற்பத் தெய்வமும் கோயிலும் சிறப்புப் பெறுகின்றன. ஒவ்வொரு சிறுதெய்வத்திற்கும் ஏதேனுமொரு தோற்றக்கதை வாய்மொழி மரபில் கதையாகவோ, பாடலாகவோ வழங்கப்பட்டு வருகின்றன. சிறுதெய்வக் கோயில்கள் பெரும்பாலும் மரத்தடியிலும் குளம், கண்மாய்,ஏரி,ஆறு போன்ற நீர்நிலைகளுக்கு அருகிலுமே அமைந்திருக்கின்றன. இக்கோயில்கள் கிழக்கும் வடக்கும் பார்த்து இருத்தல் வேண்டும் என்பது மரபு. சிறுதெய்வங்களுக்குக் கோயில் எழுப்பி வழிபடும் வழக்கம் பிற்காலத்தில் தோன்றியதே ஆகும்.

**சப்தகன்னிகள்:**

சப்த கன்னியர் அல்லது சப்த மாதாக்கள் வழிபாடு என்பது அம்பிகை வழிபாட்டின் அங்கமாகக் காணப்படுகின்ற தெய்வ வழிபாடு ஆகும். ஆதிபராசக்தியின் சக்திகளாக அவதரித்த பிராம்ஹி, மகேஸ்வரி, வைஷ்ணவி, கவுமாரி, வாராகி, இந்திராணி, சாமுண்டி ஆகிய ஏழு கன்னியர்களே சப்த கன்னியர் என்றும் சப்த மாதாக்கள் என்றும் அழைக்கப்படுகின்றனர்.

சண்டன், முண்டன் என்ற அரக்கர்கள் தவம் செய்து பிரம்மனிடம் பெண்ணின் கருவில் தோன்றாத கன்னித்தன்மை வாய்ந்த ஒரு பெண்ணால் மட்டுமே தங்களுக்கு மரணம் ஏற்படவேண்டும் என்ற அரிய வரத்தைப் பெற்றனர். அந்த வரத்தை வாங்கிய

அரக்கர்கள், தங்களை யாராலும் அழிக்க முடியாது என்ற எண்ணத்தில் மக்களுக்கும், தேவர்களுக்கும் கொடுமைகளைச் செய்தார்கள். அவர்கள் பெற்ற வரத்தின் காரணமாக, மும்மூர்த்திகளாலும் அவர்களை அழிக்க இயலவில்லை.இந்த அரக்கர்களின் அக்கிரமங்கள் எல்லை கடந்து போக, அவர்களை அழிக்க வேண்டி அன்னை பராசக்தி 'பிராம்ஹி, மகேஸ்வரி, வைஷ்ணவி, கவுமாரி, வாராகி, இந்திராணி, சாமுண்டி' ஆகிய சப்த கன்னியர்களை உருவாக்கினார்.

ரிக் வேதம், மார்க்கண்டேய புராணம், காளிதாசரின் குமார சம்பவம், விஷ்ணு தர்மோர்தர புராணம், தேவி பாகவதம் போன்றவற்றில் கன்னிமார்களைப் பற்றி கூறப்பட்டுள்ளன. தங்கள் குலதெய்வம் எது என்று தெரியாமல் இருப்பவர்கள் சப்த கன்னியரை வழிபடுவர்.சோழர் கால கோயில்களில் மட்டுமல்லாமல் அதற்கு முந்தைய காலத்திலிருந்து சப்த கன்னியர்கள் கோயில்களில் இருந்துள்ளனர் என்பது புலனாகிறது.

**சாமுண்டி என்கின்ற பிடாரி:**

சப்த கன்னிகளில் அனைத்து சக்திகளையும் பெற்றவளாக பிடாரி உள்ளாள். சப்தகன்னிகளில் முதலில் தோன்றியவள்.அவள் பதினாறு கைகளிலும் பதினாறு விதமான ஆயுதங்கள்கொண்டவள்; மூன்று கண்கள் செந்நிறத்தால் ஆனது ; யானைத் தோலால் ஆன ஆடையை அணிந்திருப்பவள்;கறுப்பு நிறமானவள்; பயங்கரமான தோற்றம் கொண்டவள்; இறந்த மனித உடலை இருக்கையாகக் கொண்டவள்; பாம்புகளை உடலில் அணிந்திருப்பாள்; ஒட்டிப்போன மெலிந்த வயிறு, குழிவிழுந்த கண்களைக் கொண்டிருப்பாள்;கரங்களில் சூலாயிதமும், கபாலமும் ஏந்தி இருப்பாள்;இத்தேவி பிடாரி (பீடா=துயரம், ஹரி=நீக்குபவள்) என்று பண்டை நாளில் வணங்கப்பட்டாள். பிடாரிக்கோவில்கள் பற்றி ஏராளமான கல்வெட்டு குறிப்புகள்

பல்லவ, சோழர், பாண்டியர், சாசனங்களில் கிடைக்கின்றன. பிடாரிக்கு சாமுண்டீஸ்வரி,கருக்காத்தம்மன், பிடாதி, முப்பிடாதி போன்ற பெயர்களும் வழக்கில் உள்ளன.

**நடுகல் வழிபாட்டு முறை:**

பண்டைய காலத்துப் போர்மரபில் வழிபாட்டுச் சடங்குகள் நிகழ்ந்துள்ளதைத் தொல்காப்பியம் உறுதி செய்கின்றது. இறந்தவீரனுக்கு நடுகல் நட்டு அபிஷேக, ஆராதனை செய்து பிடித்தமான உணவுப் பொருட்களைப் படையிலிட்டு வழிபட்டுள்ளனர். போரில் உயிர் நீத்த வீரனுக்கு, அவனுடைய பெயரையும் வீரப்புகழையும் கல்லில் பொறித்து அவன் நினைவாகப் பலரும் வழிபடுமாறு கல் நடுவதை நடுகல் என்பர். தொல்காப்பியர் நடுகல் எடுத்தலின் நிலைகளை வெட்சித் திணையில் குறிப்பிட்டுள்ளார்.

> "காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
> சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தல் என்று
> இருமூன்று வகையிற் கல்லொடு புணர"[2] (தொல். பொருள். 21)

இது போன்ற சான்றுகள் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். சங்க இலக்கியங்களிலும் இத்தகு நடுகல் வழிபாட்டு முறையைக் காண முடிகின்றது. குறிப்பாக, குறிஞ்சித் திணையில், மலையும் மலை சார்ந்த வாழ்வில் ஆநிரை கவர்தல், மீட்டலில் ஈடுபட்டு, வீரமரணம் அடைந்தவர்களுக்கே 'நடுகல்' நட்டு வழிவழியாக வழிபாடு நிகழ்ந்திருக்கின்றது. புறநானூற்றில் நடுகல் வழிபாடு குறிப்பிடப்பட்டுள்ளது. கல்நடுதல், நன்னீராட்டுதல், பீலி சூட்டுதல், பலியிடுதல், நெய்விளக்கேற்றுதல், மது படைத்தல், மாலை சூட்டுதல், வணங்குதல் ஆகிய வழிபாட்டு முறைகள் காணப்பட்டுள்ளன.நடுகல் அமைக்கும் போது இறந்தவர்கள் பாவித்தப் பொருட்களை இட்டுப் புதைத்தலையும் புறநானூறு பதிவு செய்துள்ளது.

“ஊர்நனி இறந்த பார்முதிர் பறந்தலை,
ஓங்குநிலை வேங்கை ஒள்ளிணர் நறுவீப்
போந்தை அம் தோட்டின் புனைந்தனர் தொடுத்துப்,
பல்ஆன் கோவலர் படலை சூட்டக்,
கல்ஆ யினையே-கடுமான் தோன்றல்!
வான்ஏறு புரையும்நின் தாள்நிழல் வாழ்க்கைப்
பரிசிலர் செல்வம் அன்றியும் ! விரிதார்க்
கடும்பகட்டு யானை வேந்தர்
ஒடுங்க வென்றியும், நின்னொடு செலவே”[3] (புறம். 22ம் பா.)

குழு மக்களின் தலைவன் போரில் மரணம் அடைந்தால் அவனுக்கு நடுகல் நட்டு பனம்பூமாலை அணிவித்து வழிபட்டதாகப் புறநானூற்றுப் பதிவு உள்ளது.

**சாத்தான்டி அம்மன் தல வரலாறு:**

திருச்சி சத்திரம் பேருந்து நிலையத்திலிருந்து கரூர் மாவட்டத்திற்குச் செல்லும் வழியில் சுமார் 25 கி.மீ. தொலைவில் உள்ள ஊர் நங்கவரம் ஆகும். அவ்வூரிலுள்ளசாத்தான்டி அம்மன்கோவில் ஏறத்தாழ ஆயிரம் வருடம் பழமையானது. களத்து மேடு ஊரின் மேல் திசையில் எட்டிய தொலைவு வரை நெல் விளையும் பூமி. இந்த வயல் வெளிகளுக்கு இடையே ஒரு ஆலமரம் இருந்தது. வயலில் விளையும் நெற்கதிர்களைக் கொட்டி அதை சிறுசிறு கட்டுகளாக எடுத்துச் செல்வர். சில பெண்கள் களத்து மேட்டில் நான்கு திசையிலும் சிதறிக் கிடக்கும் தானியத்தைக் கூட்டி ஒன்று சேர்த்து எடுத்துச் செல்வார்கள். அப்போது திடீரென ஒரு குரல் அசரீரியாய் ஒலித்ததாக நம்பப்படுகிறது.‘பயப்படாதே! நான் தான் சாத்தாயி பேசுகிறேன். ஆடி வெள்ளத்தில் கேரளாவில் இருந்து அடித்து வரப்பட்டு, இந்தக் களத்து மேட்டில் ஒதுங்கியிருக்கிறேன். என்னுடன் மலையாள கருப்புசாமியும் இருக்கிறார். எங்களுடன் என்னையும் சேர்த்து ஏழு பெண்கள் வந்தோம்’ எங்களுக்காக ஒரு கோவில் கட்டச்சொல்.

உலக்கை சப்தம் காதில் விழாத தொலைவில், ஊருக்கு வெளியே அந்தக் கோவில் இருக்க வேண்டும். நான் ஊரையும் ஊர் மக்களையும் காப்பாற்றுவேன்' என்று கூறியதுடன் அந்தக் குரல் ஓய்ந்ததாகக் கூறுகின்றனர்.அதன் பின் குரல் ஒலித்த இடத்திற்குப் பெரியவர்கள் சென்று அம்மன் சிலை மற்றும் கருப்பசாமி சிலையைப் பிரதிஷ்டை செய்தனர்.

**கோயில் அமைப்பு:**

சாத்தாயி அம்மனின் ஆலயம் கிழக்கு திசை நோக்கி அமைந்துள்ளது. கருவறையில் சப்த மாதர்களான பிராமி, மகேஸ்வரி, கௌமாரி, வைஷ்ணவி, வராஹி, இந்திராணி ஆகியோருக்கு நடுநாயகமாக, சாமுண்டியே சாத்தாயி அம்மன் கருவறையில் வடதிசை நோக்கி உள்ளார். அம்மனின் இடது புறம் மலையாள கருப்புசாமியின் சன்னிதி உள்ளது.ஆதியில் பூமியில் கிடைத்த கருப்புசாமியின் விக்கிரகம் சேதமடைந்ததால், புதியதாக சுதையில் உருவான கருப்புசாமி சிலை தற்போது மூலவராக பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. ஆதி கருப்புசாமியின் சிலை அர்த்த மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ளது. மதில் சுவர் இல்லாத கோவில் அமைப்பைக் கொண்டது.

**சாத்தாயி அம்மனின் தோற்றம்:**

சாத்தாயி அம்மனுக்கு நான்கு கரங்கள். பாம்பு, பம்பை, சூலம், கிண்ணங்களைக் கரங்களில் தாங்கி, பீடத்தில் அமர்ந்த நிலையில் காட்சிதருகிறாள்.கழுத்தில் தேள் மாலை அணிந்திருக்கிறாள்.விக்கிரகம் தேள் மாலையுடனேயே காணப்படுகிறது.

**நம்பிக்கை:**

பொதுவாக இந்த ஊரில் தேள் யாரையும் கடிப்பதில்லை என்றும், கண்ணில் படும் தேளை யாரும் அடிக்க மாட்டார்கள்என்றும்கூறுகின்றனர். தேள் கடித்தால்

சாத்தாயியின் குங்குமத்தையும், விபூதியையும் பூசினால் தேளின் விஷம் விரைவாக இறங்கி விடும் என்பது நம்பிக்கையாக உள்ளது. இக்கோயிலில் கடைசியாக 1986 ஆம் ஆண்டு திருவிழாநடத்தப்பட்டுள்ளது. ஊர் மக்கள் சண்டையின் காரணமாகத் திருவிழா நடத்தப் பெறவில்லை. 2015ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டுள்ளது.அம்மனுக்கு சைவ பூஜையும் மலையாள கருப்பு சாமிக்குக் கிடா வெட்டுப் பூசையும் நடைபெறுகிறது.சோழிய வெள்ளாளர் சமூகத்தைச் சார்ந்த குடும்பத்தினர் மட்டுமே இங்கு பூசாரியாக இருக்கின்றனர்.

**முடிவுரை:**

மக்களின் வாழ்வில் ஏற்படும் இன்ப துன்பங்களுக்கும் நோய் நொடிக்கும் சிறு தெய்வங்களையே தஞ்சம் அடைகின்றனர் படையல்களும் பழியும் இட்டு தங்கள் வேண்டுதல்களை நிறைவேற்றிக் கொள்கின்றார்கள். விழா எடுப்பதன் மூலம் உள்ளத்திற்கு மகிழ்வும் உறவுகளுக்கு தொடர்பும் ஏற்படுத்திக் கொள்கிறார்கள். திருவிழாவை எதிர்நோக்கிக் கொண்டும் உள்ளனர்.

**துணைநின்ற நூல்கள்:**


1.இளங்குமரன். இரா (உரையாசிரியர்) - புறநானூறு மூலமும் உரையும் வர்த்தமானன் பதிப்பகம் 21, இராமகிருஷ்ணா தெரு, தியாகராயநகர், சென்னை -17 முதல் பதிப்பு -2022

2. சக்திவேல்.சு - நாட்டுப்புற இயல் ஆய்வு மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை –08 முதல் பதிப்பு - 1983

3. தமிழண்ணல் (உரை விளக்கம்) - தொல்காப்பியம் (மூலமும் கருத்துரையும்) மீனாட்சி புத்தக நிலையம் மயூரா வளாகம்,48 தானப்ப முதலி தெரு, மதுரை -01 முதல் பதிப்பு -2008